மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மரவள்ளிக் கிழங்கை காகிதம் செய்யப் பயன்படுத்துவதில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாவள்ளிக் கிழங்கை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நடைமுறையில் — கடந்த வருடத்தில்—அரசாங்கச் செலவில் உதவி எதுவும் செய்யவில்லை. கரணைகளை வரவழைத்துக் கொடுக்கும்போது லாபமும் இல்லாமல், நஷ்டமும் இல்லாமல் விநியோகம் செய்கிறோம்.

திரு. தி. பொன்னுமலை: சேலம் மாவட்டத்திலுள்ள ஆராய்ச்சிப்பண்ணை நில்வாரப்பட்டி என்கிற என்னுடைய கிராமத்தில் தான் இருக்கிறது. ஆனால் சிறிய இடத்தில் இருக்கிறது. அதை விரிவுபடுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அந்தப் பண்ணை 30 ஏக்கரா குத்தகை நிலத்தில் அங்கே இருக்கிறது. அந்த இடத்திலேயே அதை விரிவுபடுத்த வசதியில்லை. அதை மூடி விட்டு 250 ஏக்கரா நிலமுள்ள வேறு ஓர் இடத்தில் ஆராய்ச்சிப் பண்ணையைத் தொடங்கியிருக்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி

* 159. வினா—திரு. எல். கணேசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வருத்தத்தோடு சொல்கிறேன்—இல்லை.

திரு. என். கிட்டப்பா: மற்ற மாவட்டங்களுக்கும் உணவினை உற்பத்தி செய்து கொடுக்கிற தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி நிறுவப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட

நெடுங்காலமாக வைக்கப்பட்டு வந்துகொண்டே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட வருத்தத்தோடுதான் இல்லை யென்று சொன்னார்கள். இனிமேலாகிலும் அந்த மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஏற்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஒரு வேளாண்மைக் கல்லூரி தஞ்சை மாவட்டத்திற்குத் தேவை என்பதை உள்ளூர— மனதார ஒப்புக்கொள்கிறேன். இப்போதுள்ள நிலையில்— சிதம்பரம் தாலுக்கா தஞ்சை மாவட்டத்தை ஒட்டி—நீர்வளம், நிலவளம் நிரம்பியதாக இருக்கிறது. அங்கே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினால் வேளாண்மைக் கல்லூரி நடத்தப்பட்டு வருகிறது. அது தொடர்ந்து அங்கே நடைபெற வேண்டுமா? அல்லது தனியாக தஞ்சை மாவட்டத்திலேயே வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்பட வேண்டுமா? தஞ்சையில் ஆரம்பிக்கப்பட்டு விட்டால் இங்கு தேவையா என்பது எல்லாம் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. பு. செ. முத்துச்செல்வன்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே, திருச்சியிலே ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று 2 ஆண்டுகளுக்கு முன்பு தீர்மானம் போட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, அது எந்த நிலையில் உள்ளது, அதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற தீர்மானத்தின் அடிப்படையிலே கொஞ்சம் பணம் வசூல் செய்யப்பட்டது. அந்தப் பண வசூல் வேறு காரியங்களுக்கு, மக்களுக்கு உதவக்கூடிய காரியங்களுக்குச் செலவழிக்கப்பட்டுவிட்டது. ஆகவே திருச்சியிலே தொடங்குகிற திட்டம் இப்போது நடைமுறையில் இல்லை.

திரு. அ. தேவேந்திரன்: தமிழ்நாட்டிலே தஞ்சை மாவட்டம் ஒரு டெல்டா பிரதேசம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். தஞ்சை மாவட்டத்திலுள்ள நன்னிலத்தில் திருமலைராஜன் ஆண்ட காலத்திலே மும்மாரி பெய்த நல்ல நிலம் 200 ஏக்கர் வரையில் இருக்கிறது. அங்கே வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கான இடமும் இருப்பதால் அதைப்பற்றி அரசு ஆராயுமா?

1975 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வேளாண்மைக் கல்லூரி தொடங்குவதற்கு 500 ஏக்கருக்கு மேல் குறைந்த பட்சம் தேவை. அதிகமாக இருந்தால்கூட நல்லது. குறிப்பாகச் சொல்கிறேன். உத்திரப்பிரதேசத்தில் பந்த் நகர் என்ற இடத்திலே விவசாயக் கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்த விவசாயப் பல்கலைக் கழகத்திலே 10 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. அவர்கள் அதனால் வெகு லகுவாகக் காரியங்களைச் செய்துகொள்ள முடிகிறது. அந்த முறையிலே அவர்களுக்கு அதிலேயிருந்து 1 கோடியே 90 லட்சம் ரூபாய் வருவாய் இருக்கிறது. கல்லூரி தொடங்குகிற இடத்திலே, பல்கலைக் கழகத்தைப் பற்றி மட்டும் சொல்லவில்லை, கல்லூரியைத் தொடங்குகிற இடத்திலேகூட போதிய இடம் தேவைப்படுகிறது, அது மட்டுமல்ல, அங்கே ஆராய்ச்சி சிறப்பாக அமைவதற்கும் வசதியாக இருக்கும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். 500 ஏக்கர் தேவை. இடம் இருந்தால் அது பின்னாலே ஆலோசிக்க வேண்டிய காரியம்.

Amalgamated fund for Ex-servicemen.

* 140 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state—

(a) whether it is a fact that a Committee has been set up by the Government to administer the Amalgamated Fund for Ex-servicemen; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) மத்திய அரசு மே மாதம் 1967-ஆம் ஆண்டு முன்னாள் இராணுவ வீரர் நலனிற்காக ஏற்படுத்திய சிறப்பு நிதியில் தமிழ் நாட்டிற்கு அளிக்கப்பட்ட பங்கு தொகையினை பராமரிக்க அறக் கட்டளை விதியின் (Charitable Endowments Act) கீழ் குழு ஒன்றை நியமித்தது. சனவரி 1970-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் போருக்குப்பின் இராணுவத்தினர் மறுவாழ்விற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த நிதியின் மீதி தொகையும் இச்சிறப்பு நிதியுடன் இணைக்கப்பட்டு தற்போது "தொகுப்பு நிதி" (Amalgamated Fund) என வழங்கப்பட்டு முன்னாள் போர் வீரருக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் அவர்களின்